# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1904/31 - 2015 මාර්තු මස 04 වැනි බදාදා - 2015.03.04

*1904/31 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைக் கணக்காய்வுச் சேவை மீதான பிரமாணக் குறிப்பின் 2 ஆம் பந்தி மற்றும் 3 ஆம் பந்தித் திருத்தம்**

*1989, திசெம்பர் 11 ஆந் திகதிய 588/5 ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 993/17 ஆம் இலக்க 1997, செத்தெம்பர் 19 ஆந் திகதிய மற்றும் 1056/23 ஆம் இலக்க 1998, திசெம்பர் 04 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகைகள் மூலம் திருத்தப்பட்ட, இலங்கைக் கணக்காய்வுச் சேவை மீதான பிரமாணக் குறிப்பின் 2 ஆம் பந்தி மற்றும் 3 ஆம் பந்தி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் திருத்தம் செய்யப்பட்டதை அடுத்து திருத்தப்பட்ட பந்தி தொடர்பாக தெரிந்து கொள்ளப்படுவதற்காக வெளியிடப்படுகின்றது.*

*இத்திருத்தம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.*

*டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன,*
*பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.*

*கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,*
*பத்தரமுல்லை,*
*2015, மாச்சு 04.*

**இலங்கைக் கணக்காய்வுச் சேவை மீதான பிரமாணக் குறிப்பின் 2 ஆம் பந்தி மற்றும் 3 ஆம் பந்தித் திருத்தம்**

*1989, திசெம்பர் 11 ஆந் திகதிய 588/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 993/17 ஆம் இலக்க 1997, செத்தெம்பர் 19 ஆந் திகதிய மற்றும் 1056/23 ஆம் இலக்க 1998, திசெம்பர் 04 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகைகள் மூலம் திருத்தப்பட்ட, இலங்கைக் கணக்காய்வுச் சேவை மீதான பிரமாணக் குறிப்பின் 2 ஆம் பந்தி மற்றும் 3 ஆம் பந்தி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் திருத்தம் செய்யப்பட்டதை அடுத்து திருத்தப்பட்ட பந்தி தொடர்பாக தெரிந்து கொள்ளப்படுவதற்காக வெளியிடப்படுகின்றது.*

*2 (I) ஆம் பந்தியின் I ஆம் வகுப்பிற்கு மேல்,*

*“விசேட தரம் - வருடாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 508, 680 - 12 x 15, 720 - 697,320” என உள்ளடக்குதல்.*

*2 (II) ஆம் பந்தியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் கீழ் I ஆம் வகுப்பு என்பதற்கு மேலே “விசேட தரப் பதவிகள் 03” (மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி).*
*என உள்ளடக்குதல்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3 (I) ஆம் பந்திக்கு மேல் புதிய 3 (I) ஆம் பந்தியொன்றை உள்ளடக்குதல்.*

*3 (I) இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் I ஆம் வகுப்பின் I ஆம் தரத்தின் பிரதி கணக்காய்வாளர்கள் தலைமை அதிபதி விசேட தரத்திற்கு தரம் உயர்த்தப்படல்.*

(அ) கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் :

பின்வரும் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யும் சேவையில் I ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களை பதவி உயர்த்துவதன் மூலம் மாத்திரம் சேவையின் விசேட தரத்தின் வெற்றிடங்களுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் பதவி உயர்த்தப்படும்.

(i) கணக்கியல் அல்லது கணக்காய்வு அல்லது (விடயத்துறை அல்லது விடயத்துடன்) தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்று. / நிறுவனத்தால் பட்டப்பின் படிப்புப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அல்லது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்கறிஞர் நிறுவகம் அல்லது ஐக்கிய இராச்சிய சான்றுபெற்ற கணக்கறிஞரின் பட்டய அவையின் முழு அங்கத்துவ உரிமையைக் கொண்டிருக்க வேண்டும் ;

(ii) பதவி உயர்விற்காக தகைமை பெறும் நாளில் இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் I ஆம் வகுப்பின் ஐந்து (5) ஆண்டுகள் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து I ஆம் தரத்திற்கு உயர்த்தப்பட்டதை அடுத்து ஐந்து (05) சம்பள உயர்வுகளைப் பெற்றிருத்தல் ;

(iii) பதவி உயர்விற்காக தகைமை பெறும் நாளில் தகைமை பெறும் இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுத் தரத்தில் 18 ஆண்டுகளுக்குக் குறையாத தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ;

(இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் I ஆம் தரத்திற்கு நேரடியாகச் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் இப் பிரிவு உரித்தாக மாட்டாது) ;

(iv) பதவி உயர்விற்காக தகைமை பெறும் நாளிற்கு அண்மித்த ஐந்து (05) ஆண்டுகளுக்குள் வருடாந்த செயலாற்றல் திருப்திகரமானதாகவோ அல்லது உயர் நிலையில் இருத்தல் ;

(v) பதவி உயர்விற்காக தகைமைபெறும் நாளில் I ஆம் தரத்தில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருப்பதுடன் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

(ஆ) பதவி உயர்வு முறை :

இலங்கைக் கணக்காய்வுச் சேவையில் I ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் பிரதிக் கணக்காய்வாளர்களைப் பதவி உயர்த்துவதன் மூலம் மாத்திரம் சேவையில் விசேட தரத்திற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் பதவி உயர்த்தப்படுவர். மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் முழுவதையும் கொண்ட உத்தியோகத்தர்கள் வெற்றிடத்தின்படி சிரேஷ்ட நிலைக்கமைய மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளுக்காக நியமிக்கப்படுவர்.

(இ) மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளுக்கு நியமனம்:

இலங்கைக் கணக்காய்வுச் சேவையில் விசேட தரத்திலான உத்தியோகத்தர்களில் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியில் சேவையில் உள்ள சிரேஷ்ட உத்தியோகத்தருக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சையின் பரிந்துரையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் பதவியில் நிலவும் வெற்றிடங்களின்படி மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

*3 (I) ஆம் பந்தியாக புதிதாகப் பந்தியொன்றைச் சேர்க்கப்பட்டமையால் தற்போதைய சேவைப் பிரமாணம் 3 (I), (II), (III) ஆம் பந்தி தொடர் இலக்க முறைப்படி 3 (II), (III), (IV) ஆக திருத்தப்படல்.*

டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன,
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

3- 482

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.